புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

==========================================================================================

# தொல்காப்பியத்தில் தமிழர் பண்பாடு

முனைவர் கு.ச.ஜெயஸ்ரீ
முதுகலைத் தமிழ்த்துறை தலைவர்
தமிழாய்வு மையம்
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல்
கல்லூரி நெய்யூர் – 629 802.
கன்னியாகுமரி மாவட்டம்

==========================================================================================

ஆய்வு சுருக்கம்

தமிழர் தம் வாழ்வுக்கும் தமிழின் வன்மைக்கும் சான்று பகர்ந்து நிற்கும் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மையப்பொருள் மானிட வாழ்வே எனலாம் மனித வாழ்வை மையமாகக் கொண்ட இலக்கணத்தைத் தமிழிலன்றி வேறெந்த மொழியிலும் காண்டல் அரிது பொருளதிகாரம் தமிழருடைய நாகரிகம் , பண்பாடு, பழக்கவழக்கம், காதல், வீரம், கொடைச் சிறப்பு, அறச்செயல்கள் ஆகியவற்றின் கருவூலமாகத் திகழ்வதோடு அவற்றைக் கவிதையாக்கி வடிக்கும் வழிமுறையையும் கற்பிக்கின்றது. தமிழருடைய வாழ்வுக்கு வழி காட்டி இந்நூல் தமிழ் மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் கலைக் கண்ணாடியாக விளங்குகிறது. இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

உலகியலைப் படம் பிடித்து அழகாக காட்டிய புலவர்களது நூல் காலங்கடந்து நிற்க வேண்டுமெனில் அக்கால இயல்பைக் காட்டுவது மட்டுமின்றி அக்காவியத்தினுள் காணக்கிடக்கும் அக்கால மக்களின் பண்பாட்டையும் உயிர் போன்று விளக்கிக் காட்ட வேண்டும் அத்தகைய சிறந்த, உயர்ந்த, ஒப்பற்ற பண்பாட்டை விளக்கிக் காட்டும் நூல்தான் காலத்தினால் தொன்மையான தொல்காப்பியம். இந்நூல் கருத்தின் செழுமையினால் செப்பமானது, பழந்தமிழ் நாகரிகத்தின் செம்மையினையும், செம்மாந்த பெருநிலையினையும் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டும் ஒப்பற்ற ஒளி விளக்காகும். அவ்வகையில் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்ச் சமுதாய பண்பாடு வரலாற்றை தொல்காப்பியத்தின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

## பண்பாடு

” பண்பாடு உடையவரைச் சான்றோர் என்றும், ஒழுக்கமுடையோர் என்றும், ஒளியோரொன்று மாசற்ற காட்சியுடையோர் என்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் calture எனப்படும் சொல்லை தமிழில் “பண்பாடு“ என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல் எவ்வாறு இலத்தீன் சொல்லாகிய caltura agri நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் “ பண்பாடு“ என்னும் பொருளில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார்” என்று பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் கூறுவார்.

தமிழர் பண்பாட்டை ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வளர்த்து வந்த இலக்கியங்களும் கவின் கலைகளும் எடுத்துக்காட்டுகின்றன. ஆயினும் ஒரு சில நூல்களை மட்டும் தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாகக் குறிப்பிட வேண்டுமாயின் ஐந்து நூல்களைக்

குறிப்பிடுவேன். அவை தொல்காப்பியப் பொருளதிகாரம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் என்பனவாகும் என்பது தனிநாயகம் அடிகளாரின் கருத்தாகும்.

கலித்தொகையில் '' பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'' (கலி.பா. 134) என்றும் திருக்குறளில் '' பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்'' ( குறள் – 996) என்றும் பண்பாடு குறித்த சொற்கள் வருவதைக் காண முடிகிறது.

எனவே , பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமூகச் சட்டங்கள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள் திருவிழாக்கள், உணவு , பொழுதுப்போக்கு விளையாட்டுகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

பொருளதிகாரம்

தமிழர்களின் வளமான வாழ்வை செழிப்பான சீர்மையை அறிய தொல்காப்பியத்தின் பொருளாதிகாரமே மிகவும் பயன்படுவதாக அமைவதால் அதன் துணைகொண்டே இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல் செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

அகவாழ்வு

ஆணும் பெண்ணும் அன்போடு ஒன்றுபட்டுக் கூடி வாழும் வாழ்வே அகவாழ்வாகும் ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதில் ஏற்படும் இன்பத்தை எவராலும் வெளிப்படையாக எடுத்துரைக்க முடியாது. அஃது அவர்கள் உள்ளத்தால் உணரும் ஒப்பற்ற இன்பமாகும். அவ்வாறு அகத்திலே நிகழும் இன்பத்தையே அகத்திணை என்றனர்.

அகத்திணை கைக்கிளைத்திணை, குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை, பெருந்திணை என்று ஏழு வகைப்படும்.

'' கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப''

( தொல்.பொருள். அகத்நூ.1)

அஃது தொல்காப்பியருக்கு முன்பிருந்த தமிழர்கள் தமது அக வாழ்வினை வகுத்துக்கொண்ட முறையாகும். கைக்கிளை என்பது ஆண், பெண் இருவருள் ஒருவரிடம் மட்டும் காதல் உணர்வு ஏற்படுவதாகும். அஃதாவது காதல் வயப்பட்ட ஒருவன் பருவம் அடையாத இளம் பெண் ஒருத்தியிடம் காதல் கொள்வது இதனால் பருவம் அடையாத பெண்களை மணந்து கொள்ளும் பழக்கம் தமிழ் நாட்டில் இருக்கிறது என்கிறார். அப்படியானால் பால்ய விவாக முறை இருந்தது என்பது தெளிவாகிறது. பெருந்திணை என்பது பொருந்தாகக் காமம். பிறர் பழிக்கும் வகையில் கணவனும் மனைவியும் காம வெறி கொண்டு வாழ்தல். இந்தக் கைக்கிளை, பெருந்திணைகளைப் பற்றி சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளது. ஆதலால் இந்த இரு திணைகளும் தொல்காப்பிய காலத் தமிழர்களால் அவ்வளவாகப் பாராட்டப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

ஐந்திணை

'' அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணதொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே''

( தொல் – அகத்.-நூ .2)

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் கால மக்கள் நானிலத்தை அடிப்படையாகக் கொண்டே வாழ்ந்தனர் என்பதை உணர முடிகிறது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும் . சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில்,

'' முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங்கொள்ளும்''

*( சிலம்பு . 11 . 64 -66)*

*என்று காட்டப்பெறும். பாலை நிலம் தொல்காப்பியத்தில் " நடுவு நிலைத்திணை" என்று கூறப்பட்டுள்ளது.*

*குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஒழுக்கங்கள் அந்தந்த நிலங்களிலேயே நடைபெறுவன. இவை போலக் கைக்கிளைத் திணைக்கும், பெருந்திணைக்கும் தனித்தனி நிலங்கள் குறிக்கப்படவில்லை.*

*முதல் கரு உரிப்பொருள்*

*தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் சிறந்ததொரு கொள்கையாகும். மக்கள் வாழ்ந்த இடமும், காலமும் அவர்களுக்குத் தேவையான முதற்பொருள் எனக் கொள்ளப்பட்டன.(தொல்.பொருள்.அகத் -4) ஓரறிவுடைய 4-ல் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறாகிய உயிர்ப்பொருள்களும் ஏனைய உயிரில்லாத பொருள்களும் முதற்பொருள்களின் சார்பாக நின்று கருக்கொண்டு உலகின் மேல் தோற்றுகின்றன. ஆகையால் அவற்றுக்குக் "கருப்பொருள்" ( தொல்.பொருள்.அகத்.நூ.14) என்று பெயர் வழங்கிற்று மக்கள் வாழ்க்கையின் செய்திகளைப் புலப்படுத்துவது " உரிப்பொருள்" ( தொல்.பொருள்.அகத்.நூ.18) எனப் பெயர் பெற்றது.*

*முதற்பொருள் இரண்டனுள் நிலமானது நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டது. காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை என்றும், மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் பெயர் பெற்றன. முல்லைக்குக் கடவுள் (மாயோன்) திருமால் குறிஞ்சிக்குக் கடவுள் சேயோன் (முருகன்), மருதத்தின் கடவுள் வேந்தன் ( இந்திரன்) நெய்தலுக்குக் கடவுள் வருணன். இந்நான்கு பிரிவுகளல்லாமல் வேறொரு நிலப்பிரிவும் உண்டு. அதற்குப் அதாவது கோடை வெய்யிலில் மரஞ்செடிகள் உலர்ந்து, நீர் நிலைகள் வறண்டு காணப்படும் இடங்கட்டுப் பாலை என்று பெயர் . இந்நிலத்துக் தெய்வம் கொற்றவை. இவ்வைந்து நிலத்தின் பாகுபாடுகளுக்குத் "திணை" என்று பெயர். "திணை" என்றும் சொல்லுக்குத் "குடி" என்றும் ஒரு பொருள் உண்டு. குடிகள் வாழும் நிலமும் " திணை" எனப்பட்டது. சொல்லிலக்கணத்தில் விளக்கப்படும் திணைகள் வேறு. அவை உயர்திணை, அஃறிணை என்பன. பொருள் இலக்கணத்தில் விளக்கப்படும் இவ்வைந்து திணைகளும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியவை. திணை என்னும் சொல் நிலத்தை மட்டுமின்றி நிலத்தின் அமைப்பு , அங்குவாழும் மக்கள் இயல்பு, பண்பாடு, அங்கு உயிர் வாழும் விலங்குகள், பறவைகள் செடி கொடிகள், மரங்கள், உழவுப்பயிர் வகைகள், மக்கள் வழிபட்டு வந்த தெய்வகங்கள் ஆகியவற்றையும் குறிப்பனவாக உள்ளது.*

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தாலனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

*( தொல்.பொருள்.அகம்.5)*

*மொழிக்கு மட்டுமின்றி மக்களுடைய வாழ்க்கைக்கும், பண்பாட்டிற்கும் இலக்கணம் வருத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்கு ஒழுங்கு முறைகள் வருத்துக் கொடுத்த இலக்கணத்துப் பொருள் இலக்கணம் என்று பெயர். தமிழில் பொருள் இலக்கணம் ஒன்று தோன்றுவதற்கு முன்பே மக்கள் அதில் வகுத்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர் என்பதில் ஐயமில்லை. அவ்வாழ்க்கையை விளக்கிக் காட்டு மளவுக்குத் தமிழரிடையே இலக்கிய வளம் நிரம்பி இருந்தன.*

*திணைகளுக்குரிய ஒழுக்கம்*

1) *குறிஞ்சித் திணை*

*கண்ணுக்கு இனிய காட்சிகள் நிறைந்த மலையிலோ, மலைச்சாரலிலோ தான் முதலில் காதலர்கள் சந்திப்பு ஏற்படும். இருவரும் ஒரு மனப்பட்டுக் கணவன், மனைவியாக வாழ்வார்கள்.*

இவர்களுடைய சந்திப்பைப் பற்றியும் எடுத்துரைப்பதே குறிஞ்சித் திணையாகும். குறிஞ்சித் திணையின் ஒழுக்கம் தம்பதிகளாதல் என்பதாகும்.

2) முல்லைத் திணை

பிரிந்து போன காதலன் திரும்பும் வரையிலும் காதலி தன் கற்பின் வலிமையால் தன் துயரத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது முல்லை ஒழுக்கம் . அவள் ஆறுதலோடு இருப்பதற்கான காரணங்களைக் கூறுவதும் முல்லைத்திணையே. முல்லை திணையின் ஒழுக்கம் ஆற்றி இருத்தல் என்பதாகும்.

3) மருதத் திணை

காதலன், காதலி இடையே தோன்றும் ஊடல், ஊடல் உண்டாவதற்கான காரணங்கள், பாணன் , கூத்தன், பாங்கன், தோழி, விறலி, பார்ப்பான் முதலியோர் தூதர்களாயிருந்து இவர்கள் ஊடலை நீக்கிக் கூடி வாழச் செய்யும் நிகழ்வுகள் ஆகிய இவை பற்றி எல்லாம் எடுத்து கூறுவது மருதத்திணை. மருதத்திணையின் ஒழுக்கம் ஊடல் என்பதாகும்.

4) நெய்தல் திணை

காதலன் பிரிவை எண்ணிக் காதலி மனம் வருந்துதலும், தன் உள்ளத்துயரத்தை வாய்விட்டு உரைப்பதும் நெய்தல் திணையே இரங்கல் என்னும் செய்தியே நெய்தல் ஒழுக்கமாகும்.

5) <u>பாலைத் திணை</u>

காதலன் தன் காதலியை விட்டுப்பிரிந்து செல்வதைப் பற்றி சொல்வதும், பிரிவதற்கான காரணங்களைச் சொல்வதும் பாலைத்திணை, பாலைத் திணையின் ஒழுக்கம் பிரிவாகும்.

பண்டைத் தமிழர் திருமணம்

தமிழர் திருமண முறை களவு, கற்பு என இருவகையாகப் பிரித்தனர். இதில் "களவு" என்பது பெற்றோர், உற்றார், உறவினர் ஆகியோர் அறியாமல் ஒர் ஆணும் பெண்ணும் மறைவில் மணமக்களாக வாழ்தல். இவ்வாறு ஊரார் அறியாமல், உறவினருக்குத் தெரியாமல் நடத்தும் வாழ்வே "களவு" என்பர். இந்த களவுச் செய்தி பெண்ணின் பெற்றோருக்குத் தெரித்தும், பெண்ணை வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க மாட்டார்கள்.

பெற்றோரை மீறிச் சென்றால் தடுத்து விடுவார்கள்.அப்போது அவளுடன் கூடி வாழ்ந்த ஆடவன், உறவினர் மூலம் பெண்கேட்கச் செய்வான். அவர்களும் சம்மதிப்பார்கள். சில சடங்குகளுடன் மணவினை நடைபெறும். இப்போது இருவரும் வெளிப்படையாக இல்லறம் நடத்துவர். இதற்குக் "கற்பு" மணம் என்று பெயர். இந்த இருவகை மணத்தையும் தொல்காப்பியர். " வெளிப்பட வரைதல் ஆறே" ( தொல்.பொருள்.களவு.நூ.30) என்று கூறுவார். எனவே, களவு மணம் நடைபெறாமல் கற்பு மணம் நடைபெறுவதில்லை என்பதற்கு இந்த நூற்பாவே சான்றாகும்.

குடும்பம்

குடும்பம் என்பது ஒருவனும் ஒருத்தியும் திருமணம் புரிந்து குடும்பம் நடத்தப் பத்துப் பொருத்தங்கள் சொல்லப்பெறுகின்றன.

" பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உறவு நிறுத்த காம வாயில்
நிறையே அருனே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

( தொல்.பொருள்.மெய்.25)

எனக் கூறப்பெறும் இப்பத்துப் பொருத்தங்களும் இல்லறத்தைச் சிறப்பாக நடத்தி வீடுபேறு அடைவதற்குரிய அகப் பண்புகளாக விளங்குகின்றன. மக்கள் பேற்றையே இல்லறத்தின் பெரும் பேறாகக் கருதி வாழ்ந்தனர். இதனை "ஏமம் சான்ற மக்களொடு துவன்றி" என்ற தொல்காப்பிய மொழி உணர்த்தும். குடும்பத்திற்குத் தலைவன் தலைமகனே ஆவான் தலைவியும் சில இன்றியமையாத உரிமைகளைப் பெற்றிருந்தாள். குடும்பத்தில் சிறு பூசல்கள் நிகழலாம். அதனால் கணவன் மனைவியிடையில் பிளவு தோன்றலாம். அதனைத் தீர்த்து வைக்கும் வாயிலாகத் தொல்காப்பியர் பின் வரும் மாந்தர்களைக் குறிப்பிடுகின்றார்.இச்செய்தியினை,

"தோழிதாயே பார்ப்பான் பாங்கன்

பாணன் பாடினி யிளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாந்த சிறப்பின் வாயில்களென்ப''

( தொல்.பொருள்.கற்பு.52)

என்ற நூற்பா வழி அறியலாம்.

இத்தகு குடும்ப அமைப்பு அக்காலச் சமுதாயம் மிக உயர்ந்த நிலையில் இருந்ததை நமக்கு உணர்த்துகின்றது. மேலும் பண்பட்ட அமைப்பு பற்றியும் எடுத்துக்காட்டுகின்றது. குடும்ப வாழ்க்கையில் இருந்த சிலர் இரண்டாம் திருமணமும் செய்து கொண்டனர். இதனை

'' பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்
இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
கிழவோ னிறந்தது நினைஇயாங்கட்
கலங்கலு முரியன் என்பனார் புலவர்''

( தொல்.பொருள். கற்பு.31)

என்னும் நூற்பா தெளிவாக்குகின்றது.

வாழ்க்கைப் பயன்

தொல்காப்பியர் கால மக்கள் செயற்கரிய சிறந்த செயல்களைச் செய்வதே வாழ்க்கையின் பயனாகக் கொண்டிருந்தனர். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற கொள்கையினைப் போற்றியுள்ளனர் என்பதையும் அறியலாம்.

'' காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு அவன்றி
அறம் புரிச் சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இருந்த தன்பயனே''

( தொல்.பொருள். கற்பு.57)

என்ற நூற்பாவால் மேற்கூறிய கருத்து தெளிவாகப் புலப்படுகிறது.

காலம்

காலத்தைப் பகுக்கையில் கார், கூதிர் முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பெரும்பொழுதையும், மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், ஏற்பாடு என ஆறு சிறுபொழுதையும் கொண்டனர். இதன் அடிப்படையில் தங்களின் தொழிலையும், உணவினையும் அமைத்துக் கொண்டனர்.

உணவும், தொழிலும்

குறிஞ்சி நில மக்கள் மூங்கில் அரிசி, தினை, தேன், மலையில் விளையும் கிழங்கு முதலியவற்றை உண்டனர். அருவி, சுனை நீரைக் குடித்தனர். யாழ், தொண்டகப்பறை முதலியவற்றைப் பயன்படுத்தினர். வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்டனர்.

முல்லை நில மக்கள் வரகு, சாமை, கொள்ளு கடலை, அவரை, துவரை முதலியனவற்றைப் பயிரிட்டு அவற்றை உண்டனர். முல்லை மலர்களைச் சூடினர். மக்கள் ஆநிரைகளை மேய்த்தல், புன்செய்ப் பயிர் செய்தல் ஆகிய தொழில்களைச் செய்தனர். ஆடு மாடு முதலியவற்றை மேய்த்து அவற்றின் பால், தயிர், நெய் முதலியவற்றையும் உண்டனர்.

மருத நிலத்தில் உள்ளவர்களே நிலையாக வாழ்ந்து நாகரிகத்தை வளர்த்தவர்கள் எனலாம். செந்நெல்லும் வெண்ணெல்லுமே உணவு. மக்கள் நெற்பயிர் செய்தல், நெல்லரித்தல் முதலிய தொழில்களைச் செய்தார்கள்.

நெய்தல் நிலத்தில் மீன் முக்கிய உணவு அதனை விற்று விலையாகப் பெறும் உணவுப் பொருள்களையும் உணவாகக் கொண்டனர். மக்கள் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் முதலிய தொழில்களைச் செய்தனர்.

பாலை நிலத்தில் வழிப்பொருள் பறித்தலும் கொள்ள கொள்ளுதலுமாகிய தொழில்களைச் செய்து அவற்றால் கிடைக்கும் பொருட்கள் உணவிற்குப் பயன்படுத்தப்பட்டன.

*கலை*

*ஒவ்வொரு நிலத்திலும் பறையெலிக்கும் தொழில் பறையனுக்கும், இசை தொழிலாகிய பண்பாடும் தொழில் பாணனுக்கும் அமைந்திருந்தது. இது போன்ற பாணன், பறையன், கடம்பன், துடியன் என்ற நால்வகைக் குடிகளும் பரம்பரையாக நிலைத்த குடிகள் என்ற குறிப்பு புறநானூற்றில் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலத்திலும் வெவ்வேறு யாழைப் பயன்படுத்தியதால் பண்டைத் தமிழர் இசைக்கலையில் மிகத் தேர்ச்சியுற்றோர் என்பது தெளிவாகிறது.*

*வழக்கம்*

*பண்டைக்காலத்தில் பெண்டிரைக் கப்பலில் அழைத்துக் கொண்டு பொருளீட்டல் பொருட்டு அயல்நாடு செல்லும் வழக்கம் இல்லை என்பதை " முந்நீர் வழக்கம் மகடூஉ வொடில்லை" ( தொல். அகத். நூ.37) என்னும் நூற்பாவால் அறிய முடிகிறது.*

*புறவாழ்வு*

*" அகத்திணை மருங்கின் அரில்தப உனாந்தோர்*
*புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்*
*வெட்சி தானே குறிஞ்சியது புறனே."*

*( தொல். புறத். நூ.1)*

*என்னும் நூற்பாவைக் கொண்டு அகத்திணையாகிய குறிஞ்சிக்குப் புறத்திணையாக அமைவது வெட்சி என்பதை அறிய முடிகிறது.*

*அகத்திணையை ஏழாக வகுத்துக் கூறியுள்ளார். தொல்காப்பியர். அவை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை வாகை, காஞ்சி, பாடாண் என்பனவாகும். இந்தப் புறத் திணைகளிலேயே தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் நடைபெற்ற போர் முறைகளைக் காணலாம். போரிலே தமிழர்காட்டிய வீரச் செயல்களை அறியலாம். தமிழரின் அரசியல், கொடை, புகழ் ஆகியவைகளையும் உணர முடிகிறது. உலக நிலையாமையும், அறவுரைகளும் இவற்றுள் காணப்படுகின்றன.*

*வெட்சித்திணை*

*போர் புரிய கருதிய வேந்தன் எதிரில் பசு மந்தையைக் கவர்வதும், கவர்ந்த பசு மந்தையைக் எதிரி மீட்டுக் கொள்வதும் வெட்சித் திணையாகும்.*

*வஞ்சித் திணை*

*ஒரு மன்னன் தன் பகைவனுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்கு படையெடுத்துச் செல்வதும், பகை வேந்தன் அவளை எதிர்ப்பதும் வஞ்சித்திணையாகும்.*

*உழிஞைத்திணை*

*படையெடுத்துச் சென்ற வேந்தன் பகைவனுடைய கோட்டை மதிலை வளைத்துக் கொள்ளுவதும் உள்ளிருக்கும் வேந்தன் அம்மதிலைக் கைவிடாமல் காப்பாற்றுவதும் உழிஞைத்திணையாகும்.*

*தும்பைத்திணை*

*ஒரு வேந்தன், தனது நாட்டின் மீது படையெடுத்து வந்த வேந்தனை எதிர்த்துப் போர் செய்து அவனுடைய வலிமையை அழிப்பது தும்பைத்திணையாகும்*

*வாகைத்திணை*

*பகைவரை வெல்லுதலும், ஒவ்வொருவரும் தத்தம் செயல்களை வெற்றி பெறச் செய்தலும் வாகைத் திணையாகும்.*

காஞ்சித்திணை

உலகம், இளமை, செல்வம் இவைகளின் நிலையாமையைப் பற்றியும் மற்றும பல அறிவுரைகளையும் கூறுவது காஞ்சித்திணையாகும்.

பாடாண் திணை

மக்களைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ, அவர்களுடைய ஒழுக்கம், வீரம், புகழ், கொடை முதலியவற்றைப் புகழ்ந்து பாடுவது பாடாண்திணையாகும்.

முடிவுரை

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணை நிகழ்வுகளைப் பற்றியே தொல்காப்பியம் விரிவாகக் கூறுகின்றது. அகப்பொருளைப் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் இந்த ஐந்திணை நிகழ்ச்சிகளையே அழகுபட எடுத்துரைக்கின்றன. ஒத்த பருவமும், ஒத்த உருவமும், ஒத்த குணமும், ஒத்த அறிவும், ஒத்த நிலைமையும் உடைய ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே காதல் மணமாகும். இவ்விருவருள் பெண்ணைக் காட்டிலும் ஆணின் தரம் உயர்ந்ததாகவும் இருக்கலாம். இத்தகைய மனமொத்த இருதம்பதிகளுக்குள் நடைபெறும் காதல் நிகழ்வுகளைப் பற்றியே குறிஞ்சி, பாலை,முல்லை,மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளும் கூறுகின்றன.

கைக்கிளையும், பெருந்திணையும் சிறந்த ஒழுக்கமல்ல ஆயினும் அவ்வொழுக்கங்களும் தமிழ் மக்களிடையே நடை பெற்று வந்தன. அவைகளும் வெளியில் சொல்ல முடியாத அகவொழுக்கங்களாகவே கருதப்பட்டன. ஆகையால் அவைகளையும் அகத்திணையுடன் சேர்த்துள்ளனர். முன்னோர் பின்பற்றியவற்றையே தொல்காப்பியரும் கூறியுள்ளார். தொல்காப்பியம் புறத்திணையை ஏழு பகுதியாகவும் அகத்திணையை ஏழு பகுதியாகவும் வகுத்துக் கூறுகின்றது. மக்களின் வாழ்க்கைச் செய்திகள் அனைத்தும் இவ்விரு திணைகளில் அடங்கி விடுகிறது. தொல்காப்பியம் அக்கால மக்களின் பண்பட்ட பழக்க வழக்கங்கள் சிறப்புற்றிருந்தன என்பதைத் தெள்ளிதின் விளக்குகிறது.

<u>பார்வை நூல்கள்</u>


1. புலவர் மு.தாசன் -தொல் – பொருளதிகாரம் பகுதி -2
   மேலப்பொட்டக்குழி, தெருவுக்கடை அஞ்சல்,
   குமரி மாவட்டம் – 629 157
   முதற்பதிப்பு செப்டம்பர் – 2011.
2. முனைவர். கி.இராசா - தொல்காப்பியம் பொருளதிகாரம்
   பாவை பப்ளிகேஷன்ஸ்
   6 (142) ஜானி ஜான்கான் சாலை,
   இராயப்பேட்டை, சென்னை -600014. முதற்பதிப்பு -2007.
3. டாக்டர் கே.கே.பிள்ளை -தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்
   IIIமெயின்ரோடு .CIT காம்பஸ்
   சென்னை – 600113
   பதிப்பு – 2013.
4. பக்த வத்சல பாரதி - பண்பாட்டு மானிடவியல்
   மெய்யப்பன் பதிப்பகம்
   53, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001. முதற்பதிப்பு. நவம்பர் .1990
5. இளம்பூரணர் - தொல்காப்பியம்
   பொருளதிகாரம் பகுதி -1
   சாரதா பதிப்பகம்
   திருவல்லிக் கேணி
   சென்னை – 600 005
   பதிப்பு – 2008.


********* ********* ********** ********* ********* ********** ********** **********